**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**C.O.S. No. 5/2025**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **குணசேகரன்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **பாலாறு** | **தொழில்** | மேலாண்மை பங்குதாரர், வேதகிரி பைனான்ஸ், கரூர் |
| **Village:** | **கஸ்பா கரூர் டவுன்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 50 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 19.11.2025 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வாதி நிறுவனத்தின் மேலாண்மை பங்குதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணத்தின் தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1. | 12.04.2011 | வாதி நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் | வா.த.சா.ஆ.1 |
| 2. | 30.09.2017 | வாதி நிறுவனத்தின் கூட்டாண்மை திருத்தபத்திரம் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் | வா.த.சா.ஆ.2 |
| 3. | 19.06.2019 | பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரய உடன்படிக்கை பத்திரம் அசல் | வா.த.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| 4. | 13.06.2020 | வாதி, அவரது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அசல் அஞ்சல் ரசீதுடன் கூடியது | வா.த.சா.ஆ.4 |
| 5. | 23.06.2020 | பிரதிவாதி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பியதற்கான postal returned cover அசல் | வா.த.சா.ஆ.5 |
| 6. | | வாதி நிறுவனத்தின் வங்கி கணக்கின் பரிவர்த்தனைக்காக வங்கிகணக்கு பட்டியல் சான்றொப்பமிட்ட நகல் | வா.த.சா.ஆ.6 |
| 7. | | வேதகிரி அசோசியேட்ஸ் வங்கி கணக்கின் பரிவர்த்தனைகளின் கணக்கு பட்டியல் COS.No. 13/2024 தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றொப்பமிட்ட கணக்கு பட்டியலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.7 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.